3-JAN 1956 MADRAS
REGISTRAR OF BO... 30 AUG 1954 MADRAS

கொள்ளையோ கொள்ளை !!

Regd. No. M 6207.

# கிராமோதயம்

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 ❖ திருப்பூர் - ஆகஸ்ட் 1 * 1954 * விலை 1 அணா ❖ இதழ் 19

## நயினுக்கவுண்டன்வலசு பரிசிரமாலயம்

மூலனூரையடுத்துள்ள இக்கிராமம் 'கிராமோதய' வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானது தான். அங்கு சர்வ சேவா சங்கத் தொண்டர் ஸ்ரீ எஸ். வைரலிங்கத்தின் முயற்சியால் சுமார் 20 மாணவ, மாணவியர்கள் நூற்றல், நெய்தல் தொழிலில் பயிற்சி பெற்று, அதன் மூலம் கிடைக்கக்கூடிய வருவாயைக்கொண்டே தமது உணவு உடைத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் திசையில் வேலைசெய்து வருகிறார்கள் என்ற செய்தியும் ஏற்கனவே 'கிராமோதய' வாயிலாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு சமூகநலத்துறையில் மேலும் ஒரு படி முன்னேறியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிதரும் செய்தியை வாசகர்களுக்கு அளிக்கிறோம்.

### பரிசிரமாலயத்துக்கு தனிக்கட்டிடம் உழைப்பால் உருவாகிறது

இந்த பரிசிரமாலயம் இதுவரை கிராமத்தினர் விரும்பித்தந்த ஒரு வீட்டில் நடைபெற்று வந்தது. மாணவர்களின் எண்ணிக்கையும் வேலையும் பெருகவே இடவசதி தேவைப்பட்டது. அதனால் பரிசிரமாலயத்தில் பயிற்சிபெறும் சிறுவர்களின் பெற்றோர்கள் யாவரும் ஒன்றுகூடி வீட்டுக்கொருவராக தினமும் தங்கள் உழைப்பைத் தந்து புதிய கட்டிடம் ஒன்று பரிசிரமாலயத்திற்கென கட்டித்தருவதென்று தீர்மானித்து கட்டிடம் உருவாகிக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் பூர்த்தியடைந்துவிடும், என எதிர்பார்க்கப்படுகிறது. கட்டிடம் கட்ட இடமும் இலவசமாக கிடைத்திருக்கிறது.

### தன் கையே தனக்குதவி

கிராம மக்கள் தங்கள் உழைப்பையும் உற்சாகத்தையும் கொண்டே சமூக நலத்துறையில் முன்னேறமுடியும். வெளிமூலதனமோ, பெரிய பெரிய திட்டங்களோ வகுத்தால்தான் கிராமங்கள் முன்னேறும் என்று நினைக்க வேண்டியதில்லை என்பதை இவர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். கிராம மக்களின் சக்தி ஒருமுகப்பட்டு எழுமானால் தன் பலத்தைக் கொண்டே அதிவிரைவில் சுபீட்சமடைவது திண்ணம்.

— க. சே. நடராஜன்

## "கிராமோதயம் — வாசகர்களுக்கு"

"கிராமோதயம்" பத்திரிகை சென்ற 20 மாதங்களாக கதர், கிராமக் கைத்தொழில் அபிவிருத்திக்காகவும், சர்வோதயக் கருத்துக்களை கிராம மக்களிடையே பிரசாரம் செய்தும் இயன்ற அளவு பணியாற்றி வந்துள்ளது. வாசகர்கள், சந்தாதாரர்களின் ஆதரவும் பெருகி வந்துள்ளது.

"கிராமோதய"த்தின் வளர்ச்சிக்கு உதவிய தொண்டர்களுக்கும், நேயர்களுக்கும் எமது நன்றி.

அடுத்த ஆகஸ்டு 15 முதல் அக்டோபர் 2 தேதி முடிய இவ்வாண்டு சர்க்கா ஜயந்தி காலத்தில் கதரன்பர்கள், சர்வோதய ஊழியர்கள் உதவியால் பூமிதான யக்ஞ இயக்கத்திற்கும், கிராமோதய இயக்கத்திற்கும், பரவலான பொதுஜன ஆதரவு தேடும் பொருட்டு முயற்சி செய்வதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முயற்சிக்கு "கிராமோதயம்" தனது பணியை சிறந்த முறையில் ஆற்றும் என்று உறுதியாக நம்புகிறோம்.

பொதுஜன ஆதரவுக்கு அறிகுறியாக மேற்கூறிய ஜயந்தி காலத்தில் "கிராமோதய"த்திற்கு குறைந்த பக்ஷம் 5000 சந்தாதாரர்கள் சேர்க்க வேண்டும் என்று சங்கற்பம் செய்துள்ளோம். கதரன்பர்களும், கதர் தொண்டர்களும், சர்வோதய வாதிகளும் மேற்படி சங்கற்பத்தை கைகூடச் செய்வதற்கு தங்களால் இயன்ற சகலவிதமான உதவிகளும் அளித்துதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

"கிராமோதய"த்தின் வாசகர்களும், சந்தாதாரர்களும், ஒவ்வொருவரும் ஒரு புது வாசகரையோ, சந்தாதாரரையோ சேர்த்துக்கொடுத்தால் இந்த லக்ஷியம் அதிவிரைவில் கைகூடிவிடும்.

கதர் வஸ்திராலயங்களுக்கு சமீபமுள்ள பள்ளிக்கூடங்கள், ஆதாரக் கல்விச்சாலைகள், வாசகசாலைகள், விளையாட்டு கிளப்கள் முதலிய ஸ்தாபனங்களை தொண்டர்கள் அணுகுவார்கள். அதன் நிர்வாகஸ்தர்கள் "கிராமோதய" சந்தா சேர்ப்பதற்கு முழு மனதுடன் உதவி செய்வார்கள் என்பது எமது நம்பிக்கை.

பொதுவாக "கையினால் செய்த காகிதத்தில்" இன்று தமிழகத்தில் வெளிவரும் ஒரே பத்திரிகை "கிராமோதயம்". குறைந்த செலவில் வெளியிடப்படும் இச் சிறு பத்திரிகையின் தொண்டுக்காக மாதம் இரண்டணா கொடுப்பதை ஒரு கதரன்பரோ, சர்வோதய வாதியோ வீண் என மதிக்கமாட்டார்கள். அவர்களின் பேராதரவால் நமது சங்கற்பம் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

காந்திநகர், திருப்பூர்.
30—7—'54.

ஆசிரியர்,
"கிராமோதயம்"

## சிதம்பரம் கதரன்பர்கள் கூட்டம்

வரும் 8-8-1954-ம் தேதி சிதம்பரம் காதி வஸ்திராலயத்தில் ஒரு கதரன்பர்கள் கூட்டம் நடைபெறும். அது சமயம் வரும் காந்தி ஜயந்தி காலத்தில் பூமிதான யக்ஞ பிரச்சாரத்துக்கும் தீபாவளி காலத்தில் கதர், கிராமக் கைத்தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் வகுத்து நிறைவேற்றவும், திட்டமிடுவார்கள். ஷை கூட்டத்தில் வகுக்கப்படும் திட்டம் அடுத்த இதழில் வெளிவரும்.

— அ. பாலகிருஷ்ணன்.

3-JAN 1956



# கிராமோதயம்

ஆகஸ்ட் 1 1954

## கொள்ளையோ கொள்ளை !!

### பூட்டை உடைத்தால் களவு நின்றுவிடும்

இன்றும் ஆங்காங்கு சிறு களவுகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் நான் பெரும்பாலும் மன்னித்து விடுவதற்கும் தயாராகி இருக்கிறேன். அதுமட்டுமல்ல என்னிடம் இம்மாதிரி திருட்டுக்கேஸ் பைசல் செய்வதற்காக வருமாயின் நான் அத்திருடர்களுக்கு மூன்று வருட காவல் தண்டனைக்குப் பதில் இரண்டு அல்லது மூன்று 'ஏக்கர் நிலம்' தண்டனையாகக் கொடுத்து, அவர்கள் குடும்பத்தை பராமரிக்கும்படி தெரிவித்துவிடுவேன்! நாம்தான் இம்மாதிரி குற்றங்களுக்குக் காரணமாக இருக்கிறோம் என்ற எண்ணம் ஏற்படுமாயின் நமது மனோநிலை சீர்திருந்தும்.

### நாமும் குற்றவாளிகள்

படித்த நகரவாசிகளாகிய நாமும் பல குற்றங்களைப் புரிகிறோம். ஆனால் அதெல்லாம் கணக்கிற்கு வருவதில்லை. யாராவது சுரண்டி, ஏமாற்றி 100 ஏக்கர் நிலம் சேர்த்துக் கொண்டாலோ, கூட்டுப்பண்ணை ஏற்படுத்தினாலோ, இந்த குற்றங்கள் குற்றமாக கணக்கிடப்படுவதில்லை.

### வேலிகள் அவைகளை தாண்ட தூண்டுகின்றன

அமெரிக்க ஐக்கிய ராஜ்யத்தின் முதல் ஜனாதிபதி திரு ஜார்ஜ் வாஷிங்டன் தனது சிறுவயதில் எழுதிவந்த நாட் குறிப்புகளில் ஒரு வாக்கியம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது ("The Fence is a Temptation to Jump") "வேலிகள் அவைகளை தாண்டும்படி தூண்டுகின்றன!" வீடுகளில் பொருத்தப்படும் அவ்வளவு தாழ்ப்பாள்களும், பூட்டுகளும் அவைகளைத்தாண்டி திருடும்படி வசீகரிக்கின்றன. இந்த தாழ்ப்பாள்களும், சாவிகளும் மறைந்து போனால் திருட்டும் மறைந்துவிடும்!

### திறந்த மாளிகைகளில் நிறைந்த செல்வம்

கிரேக்க ராஜ்யத்தை சேர்ந்த ஒரு யாத்ரீகர் முன் காலத்து இந்தியாவில் இருந்த செல்வந்தர்கள் தங்கள் மாடமாளிகைகளை இரவு திறந்து வைத்தேதான் தூங்குவது வழக்கம் என்று தனது யாத்திரைக் குறிப்புகளில் எழுதியுள்ளார். அவருக்கு இது ஆச்சரியமளித்தது. இந்தியாவில் கண்டது அவருக்கு தனது தேசத்தில் அரிதாக இருந்தது- இந்தியாவின் செல்வச் செழிப்பைக் கேள்விப்பட்டு பல்லாயிரம் மைலுக்கப்பால் பார்வையிடுவதற்கு மக்கள் துணிந்து வந்த அந்நாளில் இங்கு தாழ்ப்பாளும், பூட்டும் இல்லை!! இப்பொழுது நாம் தம்பிடி தம்பிடியாகக் கணக்கிட்டு சேகரிக்க பெரும்பாடு படும்பொழுது விதவிதமான தாழ்ப்பாள்களும், பூட்டுகளும் தோன்றியுள்ளன. எத்தனை பூனால் இருக்கின்றனவோ, அத்தனை சாவிகளும் இருக்கின்றன!!

தாழ்ப்பாளும், பூட்டும் அதிகரித்தது. லக்ஷ்மி தேவி மறைந்துவிட்டாள். நாம் களவைப் பாபமாகக் கருதுகிறோம். ஆனால் பணம் குவித்து வைத்துக்கொள்வதை பாபமாக எண்ணுவதில்லை! ஏனெனில் நாம் நமது ஒரு குழுவினரை தயாரித்து வைத்துள்ளோம். நாமேதான் சட்டத்தையும் இயற்றியுள்ளோம். திருடுபவரை தண்டிக்கிறோம். பணத்தை பதுக்குபவர்களுக்கு மரியாதை செய்கிறோம். இவருக்கு நாம் மெத்தை விரித்து அமரச்செய்கிறோம். உண்மையாக உழைத்துவரும் விவசாயிகளை நாம் மண்ணில் அமரச்செய்கிறோம்! இவரை 'நீ' என்று அழைத்து 'உட்கார்' என்று உத்திரவிடுகிறோம். அவரை 'தாங்கள்' 'வாருங்கள்' 'அமருங்கள்' என்று உரையாடி மெல்லிய மெத்தை மீது அமரச்செய்கிறோம். ஏனெனில் இவர் 'அவனை'க்காட்டிலும் கொடிய கொள்ளைக்காரர். சட்டங்கள் யாவும் பாதிக்காதவாறு புத்திசாலித்தனமாக இந்த கொள்ளை நடைபெறுகிறது!

### "வட்டி வாங்குவது பாபம்"—குரான்

அவருக்கு 100 ரூபாயை 1000 ரூபாயாக பெருக்குவதில் ஒரு கஷ்டமும் இல்லை. நூறேடு சுன்னம் சேர்த்தால் போதும். ஒருவருக்கு ரூ. 100 கடன் கொடுத்தால் 10 வருடத்தில் அது ரூ. 1000 ஆகிவிடுகிறது. வட்டி வாங்குவது பாபமாகக் கருதப்படுவதில்லை.

மகம்மதியர்களின் நெறிநூலாகிய குரானில் "வட்டி வாங்குவது பாபம்—கூடாது" என்று நபிநாயகம் கூறியுள்ளார். நாம் விபசாரம், பலாத்காரம் முதலியவைகளை கருதுவது போல் இஸ்லாமியர்களும் இந்த 'வட்டி'க்கொள்கையை கருதுகிறார்கள்.

வட்டி ஒரு பொருளாதார பிரச்சினை என்று நாம் கருதுகிறோம். வியாபாரம் இதை ஆதாரமாகக்கொண்டு நடைபெறுகிறது. கொள்ளை லாபம், லஞ்சம், பொய்க்கணக்கு எழுதுதல் யாவும் பாபங்கள். வட்டிவாங்குவதின் பொருள் பிறர் துன்பத்தை தனது லாபமாக்கிக் கொள்வது என்பதே. இதை நாம் பாபமாக கருதுவதே இல்லை!! ஆனால் சிறுசிறு திருட்டு நடக்கும்பொழுது நாம் சிந்தனையில் ஆழ்ந்துவிடுகிறோம்.

### மூன்று உபாயங்கள்

குற்றத்தை தண்டனையின் கொடுமையால் அடக்கிவிட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனால் உண்மையில் உள்ளத்திலிருக்கும் குறையை தீர்க்க வேண்டும். சமூகம் சீர்திருந்த வேண்டும். இதற்கு இரு வழிகள் உண்டு. ஒன்று நிலத்தையும், செல்வத்தையும் மக்களிடையே பங்கீடு செய்துவிடுவது. இரண்டாவது "கிராமம்" என்கிற தந்தை, கிராமமக்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கும் பொறுப்பை ஏற்பது. இந்த பொறுப்பை அவர்கள், கிராமக் கைத்தொழில்கள் தோன்றினால்தான், ஏற்க முடியும். நாம் கிராமங்களுக்கு வெளியிலிருந்து வரும் பொருட்களை வாங்குவோமானால், நமது விவசாயிகளுக்கு விவசாயத்தைத்தவிர வேறு ஒரு தொழிலும் இல்லாமல் போய்விடுகிறது. ஆகையால் வெளியிலிருந்து கிராமங்களுக்கு வரும் பொருட்கள் நின்றால்தான் கிராமக் கைத்தொழில்கள் வளரக்கூடும்! ஆகையால் உற்சாகமாக உழைப்பதற்கும், வேலையில்லாத விவசாயிகளுக்கு வேலை கொடுக்கும் பொருட்டும் நிலப்பங்கீடு செய்வது அவசியம்.

ஆகையால் திருட்டைத் தடுக்க (1) நிலப் பங்கீடு செய்தல் (2) கிராமக் கைத்தொழில்களபி விருத்தி செய்தல் (3) கிராம மக்களனைவருக்கும் வேலை கொடுத்தல் ஆகிய மூன்று நடவடிக்கைகளும் எடுத்தாகவேண்டும்.

(தொடர்ச்சி 84-ம் பக்கம் பார்க்க)

# அகில பாரத சர்வ சேவா சங்கம். திருப்பூர் விபாகத்தின் 1953-54-ஆம் வருஷ கிராமோதய கதர் சங்கங்களின் முதல் ஆண்டு வேலை அறிக்கை.

| சங்கங்கள் | நூல் உற்பத்தி | | கதர் உற்பத்தி | | கதர் விற்பனை |
|---|---|---|---|---|---|
| | சிட்டம் | கிரயம் ரூ. | ச. கெஜம் | கிரயம் ரூ. | கிரயம் ரூ. |
| **1 பல்லடம்** | | | | | |
| 1 வாவிப்பாளையம் | 26,397 | 6,599 | 1,580 | 2,392 | 2,235 |
| 2 கள்ளிபாளையம் | 14,434 | 3,609 | | | 840 |
| 3 நாதகவுண்டன்பாளையம் | 11,747 | 2,235 | 56 | 82 | 751 |
| 4 ராமம்பாளையம் | 20,571 | 5,143 | | | 1,398 |
| 5 வெங்கிட்டாபுரம் | 4,617 | 1,154 | | | 456 |
| **2 குண்டடம்** | | | | | |
| 6 கத்தாங்கண்ணி | 8,820 | 2,137 | 147 | 242 | 1,114 |
| 7 ஜோத்தியம்பட்டி | 17;147 | 4,201 | 1,065 | 1,805 | 1,766 |
| 8 செங்காளிபாளையம் | 12,133 | 2,944 | 63 | 105 | 1,427 |
| 19 மரவபாளையம் | 9,907 | 2,421 | 1,143 | 2,011 | 730 |
| 10 சடையபாளையம் | 22,567 | 5,429 | 748 | 923 | 2,910 |
| 11 காஞ்சிபுரம் | 14,190 | 3,461 | 828 | 1,434 | 1,953 |
| 12 கண்ணுங்கோயில் | 10,788 | 2,616 | 153 | 223 | 1,476 |
| **3 கொடுவாய்** | | | | | |
| 13 வஞ்சிபாளையம் | 10,563 | 2,447 | 1,056 | 1,547 | 625 |
| 14 அ. வேலாயுதம்பாளையம் | 17,782 | 4,429 | 546 | 814 | 357 |
| 15 காட்டூர்புதூர் | 16,735 | 4.101 | 1,617 | 2,452 | 1,101 |
| **4 கொடுமுடி** | | | | | |
| 16 தட்டாம்பாளையம் | 11,512 | 2,825 | | | 1,476 |
| 17 குப்பகவுண்டன்வலசு | 12,952 | 3,238 | | | 323 |
| **5 புளியம்பட்டி** | | | | | |
| 18 கோப்பம்பாளையம் | 16,000 | 2,996 | | | 1,955 |
| 19 புதுப்பாளையம் | 4,500 | 1,103 | | | 345 |
| **6 சென்னிமலை** | | | | | |
| 20 தாமரைக்காட்டுவலசு | 20,013 | 5,003 | | | 2,115 |
| 21 திப்பம்பாளையம் | 28,883 | 7,222 | | | 2,370 |
| **7 ஆத்தூர்** | | | | | |
| 22 பூலாம்பாடி | 1,283 | 321 | | | 367 |
| 23 மேட்டூர் | 345 | 86 | | | 160 |
| **8 படியூர்** | | | | | |
| 24 பெரியாரிபட்டி | 20,824 | 5,134 | | | 1,247 |
| 25 தம்புசெட்டிபாளையம் | 36,616 | 9,154 | | | 565 |
| 26 ப. சடையபாளையம் | 9,064 | 2,266 | | | — |
| **9 குன்னத்தூர்** | | | | | |
| 27 சூரியப்பம்பாளையம் | 20,077 | 4,849 | | | 1,952 |
| **10 மூலனூர்** | | | | | |
| 28 காசிலிங்கம்பாளையம் | 5,256 | 1,314 | | | |
| 29 சோமன்கோட்டை | 17,743 | 4,436 | 3,844 | 5,768 | 2,009 |
| 30 குமாரகவுண்டன்வலசு | 12,706 | 3,177 | 4,022 | 6,039 | 1,945 |
| 31 சேஷய்யம்பாளையம் | 104,24 | 2,606 | 624 | 934 | 639 |
| **11 காங்கயம்** | | | | | |
| 32 துலுக்கன்வலசு | 58,018 | 13,321 | 6,630 | 11,311 | 6,373 |
| 33 வானவராயநல்லூர் | 48,041 | 11,215 | 5,152 | 9,218 | 5,762 |
| 34 முதலிபாளையம் | 44,257 | 10,122 | 5.112 | 10,790 | 5,641 |
| 35 செம்மங்காளிபாளையம் | 19,405 | 4,689 | | | 1,493 |
| 36 ஆறுதொழுவு | 12,995 | 3,171 | | | 1,014 |
| 37 சேடம்புதூர் | 7,636 | 1,830 | | | 857 |
| 38 பாரவலசு | 7,545 | 1,824 | | | 680 |
| 39 முத்துப் புலவன்வலசு | 7,366 | 1,792 | | | 534 |
| 40 அக்கரைபாளையம் | 4,138 | 1,034 | | | — |
| 41 குள்ளம்பாளையம் | 1,621 | 329 | | | 116 |
| **12 தாராபுரம்** | | | | | |
| 42 வெங்கக்கல்பாளையம் | 4,213 | 1,153 | | | |
| 43 குள்ளக்காளிபாளையம் | 17,678 | 4,296 | 1,390 | 2,361 | 2,156 |
| 44 நொச்சிபாளையம் | 21,855 | 5,347 | 864 | 1,558 | 2,157 |
| 45 குங்குமபாளையம் | 4,724 | 1,186 | | | |
| 46 கொத்தனூர் | 44,145 | 10,730 | 2,389 | 4,443 | 5,043 |
| 47 உச்சனம்வலசு | 27,076 | 6,565 | 730 | 454 | 2,789 |
| 48 இச்சிப்பட்டி | 14,411 | 3,531 | 1,298 | 2,195 | 1,359 |
| 49 செங்காட்டூர் | 10,123 | 2,463 | 715 | 1,237 | 1,102 |
| 50 சல்லிமேட்டுப்புதூர் | 3,775 | 940 | 202 | 352 | 208 |
| 51 வெள்ளியம்பாளையம் | 1,948 | 457 | — | — | — |
| மொத்தம் .... | 8,07,566 | 1,94,685 | 41,974 | 70,690 | 73,891 |

3-JAN 1956



(82-ம் பக்கத் தொடர்ச்சி)

**எது திருட்டு?**

இதன்னியில் மனதில் தோன்றும் எண்ணங்களும் பரிசுத்தமடையவேண்டும். "பதுக்கல் பாபம், உடலுழைப்பைத் தவிர்ப்பது பாபம்" என்ற எண்ணங்கள் வழக்கத்திற்கு வரவேண்டும், நாம் ஏன் திருட்டைப் பாபமாகக் கருதுகிறோம்? ஏனெனில் திருடர்கள் நொடிநேரத்தில் பல்லாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடிப்பதால்தானே? 10 அல்லது 12 அணு எடுத்துச் சென்றால் நாமும், இவ்வளவு வேலைக்கு இவ்வளவு பிரயோஜனம் கிடைக்க வேண்டியதே என்று அதை விட்டுவிடுவோம். அவர்கள் கைப்பற்றும் பணம் அவர்கள் செய்யும் வேலையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருப்பதால் அதை நாம் 'திருட்டு' என்று கூறுகிறோம்.

**வெள்ளை வேஷ்டி வேலைகளும் களவே!**

ஆனால் திருடர்களை தண்டிக்கும் நியாயாதிபதிகளும் இதே வேலையைத்தான் செய்கிறார்கள். அவர்கள் அதிகத்திலும் அதிகம் தினந்தோறும் மூன்று மணிநேரம் வேலை செய்கிறார்கள். ரூ. 1000 சம்பளம் பெறுகிறார்கள். அதாவது குறைந்த வேலை செய்து அதிகம் பணம் பெறுகிறார்கள். இதன் பொருள் தான் 'திருட்டு'. தியாகத்தின் பொருள் என்ன? குறைந்த உணவு; அதிக வேலை. துறவிகளையே நாம் தியாகிகளாகக் கருதுகிறோம். அவர்கள் வாழ்நாள் முழுதும் உலகிற்கு உழைக்கின்றனர். அதற்கு பதில் சிறிது உணவு மட்டும் பெறுகின்றனர்; வருடத்திற்கு இரண்டு உடைகள் போதும். உலகிற்கு அதிக தொண்டு செய்து குறைந்த பயன் பெறுவதையே 'துறவற'மாகக் கருதுகிறோம். குறைந்த வேலை செய்து அதிக ஊதியம் பெறுபவர்கள் அனைவரும் 'திருடர்'களாக மதிக்கப்படுகிறார்கள்!

**எல்லோரும் திருடர்கள்!**

இந்தக் கணக்குப்படி நமது நியாயாதிபதிகள், வக்கீல்கள், பேராசிரியர்கள், மந்திரிமார்கள், வியாபாரிகள் ஆகிய பலதரப்பட்டவர்களும் திருடர்களாகவே கணக்கிடப்பட வேண்டியிருக்கும்! இவர்களுடைய ஒரு பெரும் சமூகமே அமைந்துவிட்டபடியால்தான் இவர்கள் திருடர்களாக கருதப்படுவதில்லை. நாளை முதல் "உடலுழைப்பின்றி உணவருந்துவது திருட்டாகும்" என்று ஒரு சட்டமேற்படுமேயாயின் இவர்கள் யாவரும் திருட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே தெளிவாகிவிடும்.

**உழைப்பாளிகளே மரியாதைக் குரியவர்கள்!**

நமது கிராம மக்களுக்கு, நமது சகோதரர்களுக்கு, வேலை கொடாமல், கூலி கொடுக்காமல், உழுதுண்ண நிலம் கொடாமல், அவர்களை நாம் வேலையில்லாதோராக்கிவிடுகிறோம்! இவர்கள் வறுமையின் கொடுமையால் திருடும்பொழுது, இவர்களைக் காட்டிலும் அதிகம் திருடுகிறவர்களிடத்திலேயே நியாயம் வழங்கும்பொருட்டு, சென்று வழக்காடுகிறோம்!

**வேலையற்றோர் சமூகம்**

இந்த போலீஸ், சூபரின்டெண்டு, ஜெயிலர், வார்டர், நியாயாதிபதிகள், வக்கீல் முதலிய இவ்வளவுபேர்களின் சுமையையும் நாம் ஏன் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்? இந்தத் திருக்கூட்டமும் வேலையில்லாதோர் திருக்கூட்டமில்லையா?

கிராமத்தின் சகல கைத்தொழில்களையும் நாம் அபகரித்துவிட்டோம். பிறகு அந்த கிராமங்களில் தோன்றிய வேலையில்லாதோரை தண்டிக்க வேறு ஒரு வேலையில்லாதோர் திருக்கூட்டத்தை தோற்றுவித்தோம்.

மொத்தத்தில் கொள்ளைக்கூட்டத்தில் நாமும் சேர்ந்துள்ளோம் என்பது தெளிவாகிறது. அதாவது நாம் மூன்று வர்க்கத்தினரும் திருடர்கள் இனத்தைச் சேர்ந்தோரே!

**திருட்டுக்கூட்டத்திற்கு வெளியே ஒரே இனம்**

திருடர்கள் கூட்டத்தில் கணக்கிடமுடியாத ஒரே இனத்தினர்தான் பாக்கியுள்ளார்கள். "விவசாயிகளும், தொழிலாளிகளும்தான்" அவர்கள். பாக்கி நாம் அனைவரும் கொள்ளைக்கூட்டத்தினரே. ஆனால் நாம் ஒருவருக்கொருவர் சகிக்க முடியாது. பிச்சைக்காரனுக்கு, மற்றொரு பிச்சைக்காரனை பிடிக்காது. நாய் தன் எஜமானனிடம் அமைதியாக இருக்கமுடியும். ஆனால் வேறொரு நாய் தென்படும்பொழுது அமைதி எங்கோ போய்விடும்!

**எண்ணங்கள் தூய்மைபெற வேண்டும்**

ஆகையால் நாம் நமது எண்ணங்களில் தூய்மையடைய வேண்டும். "தியாகம் செய்த பின் உண்க" இது தான் தர்மம். ஆகையால் நமது குறைகள் நீங்க, குற்றங்களுக்குக் காரணமாக இருக்கும் அடிப்படைகளை அகற்ற வேண்டும். உண்மை நீதி, நியாயம் யாது என்பதை மக்கள் உணர வேண்டும்.

பகடிஹார், சம்பரான், 18—6—'54. — விநோபா

## கிராமோதய கதர் சங்கங்கள்

வேறிடத்தில் திருப்பூர் வட்டகையில் கிராமோதய கதர் சங்கங்கள் சென்ற ஓராண்டு காலத்தில் செய்த வேலைச்சுருக்கம் தரப்படுகிறது. புள்ளி விபரங்களிலிருந்து தெரியும் சில பொது விஷயங்களைத்தவிர தனித்தனி பெருமைகளுடன் பல சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஒரு வருட காலத்தில் இவை அடைந்திருக்கும் முன்னேற்றம் அவைகளிடத்தில் ஆங்காங்கு சுட்டிக்காட்டப்படும் குறைகளைக்காட்டிலும் பெருமிதமளிப்பவை என்றே கருதவேண்டும். அடுத்த இதழில் சில கிராமோதய கதர் சங்கங்களின் விசேஷ சாதனைகளை வெளியிடுகிறோம்.

— ஸி. துரைராஜ்.

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

## இந்த இதழில்


| | |
|---|---|
| நைனக்கவுண்டன்வலசு பரிசிரமாலயம் | 81 |
| "கிராமோதய—வாசகர்களுக்கு" | 81 |
| சிதம்பரம் கதரன்பர்கள் கூட்டம் | 81 |
| கொள்ளையோ கொள்ளை!! | 82 |
| 1953-54-ஆுத்திய கிராமோதய கதர் சங்கங்களின் முதல் ஆண்டு வேலை அறிக்கை | 83 |
| கிராமோதய கதர் சங்கங்கள் | 84 |


"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.